**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.252/2022

நாள்: 24.10.2024

பெயர்: செல்லதுரை (வா.சா.1) த/பெ: முத்தையன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வழக்குரையை தயார் செய்த பின்னர் என் வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தார். அதில் உள்ள விபரங்களை தெரிந்துக்கொண்டேன். வழக்குரையிலும், வழக்குரையின் சொத்து விபரத்திலும் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்களுக்கு உட்பிரிவுகள் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் எந்த சர்வே எண்ணின் உட்பிரிவின் வழியாக பாதை பாத்தியம் பயன்படுத்தி வந்தேன் என்றும், பாதை பாத்தியம் கோருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் வழக்குரையில் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தில் எந்த பகுதியில் பாதை பாத்தியம் கோருகிறேன் என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எனது பிராதில் கேட்டுள்ள பாதை பாத்திய பரிகாரத்தின் வழியாக எனக்கு சொந்தமான சர்வே எண் மற்றும் உட்பிரிவில் கண்ட சொத்திற்கு செல்லவேண்டியுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. எனக்கு பாதை பாத்தியம் உள்ளது என்று நிரூபணம் செய்ய நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையர் மனுவிற்கு மனு எதுவும் செய்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் சொல்லியுள்ள தாவா மாதிரி வரைபடத்திற்கான சர்வே எண்ணும், உட்பிரிவுகளும் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட மாதிரி வரைபடத்தில் பள்ளம் பகுதி எது, மேட்டு பகுதி எது என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் அனைத்து பகுதியும் சமமாக தான் உள்ளது.

3) நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்து பள்ளப்பகுதியாகவும், மேட்டுப்பகுதியாகவும், குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. மட்டமாக தான் இருக்கும். தாவா சொத்து விபரத்தில் இரண்டு சர்வே எண்கள் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4ல் இரண்டு சர்வே எண்களில் மொத்தம் 8 உட்பிரிவுகள் சொல்லப்பட்டள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் கண்ட சர்வே எண்.265ல் நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான வா.சா.ஆ.4ல் சர்வே எண்.265/19E என்று குறிப்பிட்டுள்ளது கண்டால் மேற்படி சர்வே எண்ணில் 19 உட்பிரிவுகளுக்கு மேற்பட்ட சொத்துக்கள் உள்ளது என்று விபரம் தெரியவருகிறது என்றாலும், மேற்கண்ட 19 உட்பிரிவுகளில் எந்த உட்பிரிவின் வழியாக பாதை பாத்தியம் கோருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4) தாவா சொத்து விபரத்தில் கண்ட சர்வே எண்.266ல் நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான வா.சா.ஆ.4ல் சர்வே எண்.266/20B என்று குறிப்பிட்டுள்ளது கண்டால் மேற்படி சர்வே எண்ணில் 20 உட்பிரிவுகளுக்கு மேற்பட்ட சொத்துக்கள் உள்ளது என்று விபரம் தெரியவருகிறது என்றாலும், மேற்கண்ட 20 உட்பிரிவுகளில் எந்த உட்பிரிவின் வழியாக பாதை பாத்தியம் கோருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் பிரதிவாதி ஒரு தரப்பினர் இல்லை என்பதால் அந்த ஆவணம் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 வம்சாவழிப் பட்டியலில் சொல்லியுள்ள விபரங்கள் முழுமையானதாக இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 வம்சாவழி பட்டியலில் சொல்லியுள்ள இளவரசன், அண்ணாதுரை, கண்ணன் ஆகியோரை வழக்கில் ஒரு தரப்பினராக ஏன் சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டு காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5) உண்மையில் எனக்கு தாவா சொத்தில் பாதை பாத்தியம் இருந்திருந்தால் மேற்கண்ட நபர்களை வழக்கில் ஒரு தரப்பினராக

சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் 100 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தை பாதையாக பயன்படுத்தி வந்திருந்தால் 40 ஆண்டுகளுக்கு முன்பு நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தில் பட்டா வழங்கிய போது பாதையாக உட்பிரிவு செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போல் சர்வே எண்ணில் எந்த பாதையும் இல்லை என்பதால் தான் பாதையாக உட்பிரிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவாவில் சொல்லியுள்ளது போல் பாதை எதுவும் இல்லாததால் தான் நான் தாக்கல் செய்துள்ள பிராதில் நான் கோரியுள்ள பாதை பரிகாரம் எந்த சர்வே எண்ணில் தொடங்கி எந்த சர்வே எண்ணில் முடிகிறது என்றும் அதன் நீளம், அகலம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நீளம், அகலம் கணக்கிட்டால் அதன் மொத்த பரப்பளவு எவ்வளவு என்று கணக்கிடப்பட முடியாத அளவிற்கு குழப்பமாக உள்ளது என்றால் சரியல்ல.

6) நான் பிராதில் சொல்லியுள்ளது போல் பாதை பூஸ்துதிதியில் இல்லாததால் தான் என்னால் தெளிவாக சொல்லப்பட முடியவில்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு 03.06.2022ல் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பையும், பிரதிவாதி கொடுத்த பதிலறிவிப்பையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 03.06.2022ல் சட்ட அறிவிப்பிலும், சொத்து விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சொத்து விபரம் குறிப்பிடாததால் தான் மேற்சொன்ன அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், எந்தவித முகாந்திரமும் இல்லாமல் தொடர்ந்து பிரதிவாதிக்கு பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்து இடையூறு செய்துக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

7) நான் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எந்தவித முகாந்திரமும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் தான் நான் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பை

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையின் நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதியின் இரண்டு மகன்கள் வெளியூரில் இருக்கிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பிரதிவாதியின் வயது 75 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி வயதானவர் என்பதாலும், பிரதிவாதியின் மகன்கள் வெளியூரில் உள்ளதாலும், பிரதிவாதியை மிரட்டி அவரது சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு பாதை பாத்தியம் இருந்திருந்தால் எந்த சர்வே எண்ணின் வழியாக எனக்கு பாதை பாத்தியம் உள்ளது என்று சொல்லியிருப்பேன் என்றாலும், எனக்கு பாதை பாத்தியம் இல்லாததால் தான் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பொதுப்படியாக தாவா தாக்கல் செய்துள்ளதால் தாவாவில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், தாவா பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடிசெய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், M.Com, M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.